1984 மார்ச் 5]

நீலகிரி மாவட்ட அரசு ஊழியர்களுக்கான பருவகாலப்படி

(*156—வினா எண். 20414)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்ட அரசு ஊழியர்களுக்கு விசேஷ காலப் படி (Seasonal Allowance) நான்கு மாதங்களுக்கு வழங்கக் கோரி அரசுக்கு 1982 ஜூனில் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) பணிச்சங்கங்களிடமிருந்து வந்த கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்தது. அரசுப் பணியாளர்களுக்கு பருவகாலப்படி வழங்குவது குறித்து ஏற்கனவே தமிழ்நாடு மூன்றாவது ஊதியக்குழு நன்கு ஆராய்ந்து அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் நீலகிரி மாவட்டத்தில் பணியாற்று கின்ற அரசுப் பணியாளர்களுக்கு பருவகாலப்படி வழங்கு வதற்கான கோரிக்கையை ஏற்கவேண்டியதில்லை என அரசு முடிவு செய்துள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் இந்த குளிர் காலப்படி நீலகிரி மாவட்டத்தில் கொடுக்கப்பட்டதாகவும், அதுவும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கியதற்கு பிறகு கொடுக்கப்படாமல் அந்த குளிர்காலப் படி நிறுத்தப்பட்டதாகவும் ஏதாவது கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ? ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களுக்கு பருவ காலப்படி பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் தரவேண்டும் என்று கோரிக்கை அந்த பகுதியைச் சேர்ந்தவர்களிடமிருந்து வந்து இருக்கிறது. 3-வது ஊதிய குழுவினிடத்திலே அந்தக் கோரிக்கையை அவர்கள் வைத்தபோது அந்த 3-வது ஊதிய குழுவே அந்தக் கோரிக் கையைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

குறிப்பிட்ட பருவகாலப் படியைப் பற்றிக் கூற வேண்டுமானால், ''கோடைகாலத்தில் சுற்றுலாப் பயணிகள் உதகமண்டலத்திற்கு வருவது அதிகமாக இருப்பதால் விலைவாசி பெரிதும் உயரும் போக்கு இருக்கிறது என்ற அடிப்படையில் குறிப்பிட்ட பருவ காலப்படி வழங்க வேண்டுமென உதகமண்டலத்திலுள்ள பணியாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். சிம்லா, டார்ஜிலிங் ஆகிய இடங்களில் பணியாற்றுவோருக்கு இத்தகைய வசதி கிடைப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்த விவரம் சரியானதா என்று இமாசலப் பிரதேசம், மேற்கு வங்க அரசுகளிடம் கேட்டுத் தெரிந்து கொண்டோம்; அத்தகைய படி ஏதும் அவ்விடங்களில் வழங்கப்படுவதில்லை என்று எங்களுக்குத் தெரிய வருகிறது. மாறாக, அங்கு வழங்கப்படும் மலைவாழ்ப்படி, தமிழ்நாட்டில் வழங்கப்படுவதைக் காட்டிலும் குறைவு என்பதும் நமக்குத் தெரிய வருகிறது. பல நகரங்களிலும், பட்டணங்களிலும் திருவிழாக் காலங்களிலும், சுற்றுலாக் காலங்களிலும், சில நாட்களுக்கு மட்டும் விலைவாசியில் ஏற்றம் காணப்படுவது உண்டு. பொதுவில் சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளி தற்காலிகமாக உயரக்கூடிய இத்தகைய நிலைமைகளுக்கெனத் தனியே தொகை வழங்கி ஈடு செய்ய வேண்டியதில்லை. ஆகவே, குறிப்பிட்ட பருவகாலப்படி வழங்க வேண்டுமென உதகமண்டலத்திலுள்ள பணியாளர்கள் விடுத்துள்ள வேண்டுகோளை நாங்கள் ஏற்க இயலாது'' என்று தமிழ்நாடு மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. அதைத்தான் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கோடை காலப் படியைப் பற்றிச் சொன்னார்கள். மற்றப் பகுதிகளில் குளிர் காலங்களில் குளிர் கால அலவன்ஸ் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரிந்த ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாநில அரசு ஆக்கியிருக்கிறது. மற்ற அரசு ஊழியர்களுக்குக் குளிர்காலப் படி வழங்குகிறார்கள். ஆனால் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு என்று பிரத்தியேகமாக, தனியாக ஆணை இல்லை, ஆகவே வழங்க முடியவில்லை என்று மாவட்டக் கல்வி அதிகாரி சொல்கிறார். ஆகவே, இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட மூலக் கேள்வி, ''நீலகிரி மாவட்ட அரசு ஊழியர்களுக்கு விசேஷ காலப் படி (சீசனல் அலவன்ஸ்) நான்கு மாதங்களுக்கு வழங்கக் கோரி அரசுக்கு 1982 ஜூனில் கோரிக்கை வந்துள்ளதா''

1984 மார்ச் 5]

என்பது பற்றியது. அந்த அளவிற்கு நானும் பதிலுரைத்தேன். அதைப் பொறுத்து எடுத்த முடிவைச் சொன்னேன். குளிர் காலப் படியைப் பற்றிய நிலைமைகள் குறித்து இப்பொழுது தெளிவாக என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதன் நிலைமைகளை அறிந்து விளக்குகிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் தமிழ் நாட்டில் உயர்ந்த இடத்தில் இருக்கிறது. அங்கே எந்த விதமான தொழில்களும் போதுமான அளவிற்கு இல்லை : போக்குவரத்து வசதிகளும் சரியாக இல்லை. உணவுப் பண்டங்களெல்லாம் கூட கீழேயிருந்துதான் மேலே செல்ல வேண்டியிருக்கிறது. சீசன் காலத்தில் விலைவாசி மிக மிக உயர்ந்து விடுகிறது ; விருந்தினர்கள் அதிகமாக வருகிறார்கள். இதையெல்லாம் கருத்திற்கொண்டு அங்குள்ள அரசு ஊழியர்களுக்கு குளிர் கால அலவன்சை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் குளிர் கால வசதிகள் என்னென்ன செய்து கொடுக்கப் பட்டு வருகின்றன என்ற விவரக் குறிப்புகள் தற்பொழுது என்னிடத்தில் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம் என்று முதலில் சொன்னேன். பருவ காலப் படி வழங்குவதைப் பற்றி எடுத்துள்ள முடிவைப் பற்றிச் சொன்னேன். ஆகவே, பொதுவாக எல்லாயிடங்களிலும் தரப்படுகின்ற அப்படிப் பட்ட சில பல சலுகைகள் அங்கும் இருப்பதாகக் கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் அது பற்றி விவரமாகச் சொல்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் குளிர் காலப் படி வழங்குவதைப் பற்றி அமைச்சரிடத்தில் விவரம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அங்கே இருக்கின்ற ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் ஸ்தாபனம் மத்திய அரசாங்கத்தின் ஸ்தாபனமாகும். அந்த ஸ்தாபனத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்தில் நான்கு மாதங்களுக்கு விசேஷமான அலவன்ஸ்களை, பர்சென்டேஜ் போட்டு கொடுக்கப்படுகிறது. குளிர் காலம் முடிந்த பிறகு அது இல்லை. இப்படி மத்திய அரசாங்கமே தன்னுடைய ஊழியர்களுக்குக் கொடுக்கும் பொழுது மாநில அரசாங்கமும் அந்த ஆசிரியர்கள் உட்பட அத்தனை ஊழியர்களுக்கும் கொடுக்க வேண்டியது நியாயம் தானே? மத்திய அரசு கொடுக்கிறது என்ற அந்த அடிப்படையிலேயாவது நம்முடைய அரசு முன் வந்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 5

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடுக்கப்படவில்லை என்று இப்பொழுது நான் சொல்லவில்லை. விவரக் குறிப்புகள் இல்லை என்று தான் சொன்னேன். ஒரு குறிப்பிட்ட அடி உயரத்திற்குக் கீழே உள்ளவர்களுக்குக் குளிர் காலப் படி இல்லை என்றும், அந்த உயரத்திற்கு மேலே உள்ளவர்களுக்குக் குளிர் காலப் படி உண்டு. ஆனால் அது சம்பந்தமான கணக்கு விவரங்கள் தற்பொழுது என்னிடத்தில் இல்லை. குளிர் காலப்படி எந்த இடங்களுக்கு வருகிறது, எந்த அளவிற்கு வருகிறது, எத்தனை மாதங்களுக்குத் தருகிறோம் என்பதற்கெல்லாம் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசால் கொள்முதல் செய்யப்படும் அரிசி

(157—*வினா 21032)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் ''லெவி'' அளவை அதிகமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தற்போது வர்த்தகர் மீது அதிக பட்சமாக 50 சதவீதம் லெவி விதிக்கலாம் என்றிருப்பதை 75 சதவீதமாக ஆக உயர்த்தலாமா என்று அரசு ஆய்வு செய்கிறது.

(ஆ) அது பற்றி இறுதியான முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS